**நில அளவைச் சபை - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

நில அளவைச் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2002 ஒக்தோபர் 04 இன் 17 ஆம் இலக்க நில அளவை அதிகாரச்சட்டத்தின் 43(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் | சபையால் ஒவ்வொரு ஆண்டினதும் மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் சகல பதிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற நில அளவையாளர்களின் பட்டியல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது பதிவு செய்யப்பட்ட உரிமம்பெற்ற 1041 நில | வர்த்தமானிக்கு அனுப்பப்படும் நேரத்தில் உரிமம் பெற்ற நில அளவையாளர்களின் எண்ணிக்கை 858 ஆக இருப்பதற்கான காரணம் அந்நேரத்தில் குறைபாடுகள் இல்லாமல் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதே எண்ணிக்கையாக | சட்டத்தின் பிரகாரம் சகல பதிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற நில அளவையாளர்களின் பட்டியல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அளவையாளர்கள் காணப்பட்ட போதிலும் 2019 மார்ச் 29 இன் 2117 ஆம் இலக்க வர்த்தமானியில் பதிவு செய்யப்பட்ட உரிமம்பெற்ற 858 நிலஅளவையாளர்களின் பெயர்கள் மாத்திரமே பிரசுரிக்கப்பட்டிருந்தது. | இருந்தமை ஆகும். | |
| (ஆ) | 2018 மார்ச் 26 ஆம் திகதிய சபையின் 221 ஆவது கூட்டத் தீர்மானம் | சபையில் பதிவுசெய்யாமல் அளவை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தகைமையில்லாத நபர்கள் தொடர்பாக கண்டுபிடிப்பதற்கு பொலிஸ்மா அதிபரிற்கு அறிவிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் அத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தினமின, தினகரன் மற்றும் டெய்லி மிரர் போன்ற புதினப் பத்திரிகைகளில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் அவ் விளம்பரத்தின் பிரதிகளை சபை வைத்திருக்கவில்லை. அத்தகைய குறைபாடுகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு எதிர்காலத்தில் ஒழுங்குமுறைகள் மேற்கொள்ளப்படும். | சபையில் பதிவு செய்யாமல் அளவை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,188,879 ஆன மிகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 751,184 ஆக காணப்பட்டது. எனவே, நிதி விளைவுகளில் ரூபா 1,940,063 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. உரிமங்கள் கட்டணம், பதிவுக் கட்டணம் மற்றும் செயலமர்வுகளின் மூலம் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 1,172,274 ஆல் உயர்வடைந்தமை இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம், நிறுவகத்தின் நடைமுறை விகிதம் 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே 1:0.5 மற்றும் 1:0.2 ஆக காணப்பட்டன. அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நடைமுறை விகிதம் குறைந்த மட்டமொன்றில் காணப்பட்டது. அடுத்த வருடங்களின் உரிமங்கள் கட்டணம், பதிவுக் கட்டணங்கள் போன்றவை மூலம் உழைக்கப்பட்ட ரூபா 5,748,520 ஆன தொகை நடைமுறைப் பொறுப்புக்களாகக் கணக்கிடப்பட்டமையே இதற்கான பிரதான காரணமாக அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வெற்றிடமாகவுள்ள செயலாளர் பதவிக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக 2012 யூலை 05 ஆம் திகதி பொது முயற்சிகள் குழுவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு 2020 மார்ச் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 29.11.2017 இல் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் பின்னர் நியமனத்தை ஏற்க மறுத்துவிட்டதுடன் அளவைச் சபைக்குத் தரவுகளை மீளச் சமர்ப்பித்து ஆட்சேர்ப்புத் திட்டத்தின் நிபந்தனைகள் சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடாத்திய பின்னர் சபையின் செயலாளர் பதவிக்குப் பொருத்தமான ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொது முயற்சிகள் குழுவின் பணிப்புரைகள் பின்பற்றப்பட வேண்டியதுடன் சபையின் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு தேவையான உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முறைப்பாடுகளைத் தீர்த்தல், கோவைகளை நாளது வரையாக்கல், கணக்கீட்டு மற்றும் மக்கள் தொடர்புகளைப் பேணுதல், போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக இரு முகாமைத்துவ உதவியாளர் அலுவலர்களை நியமிப்பதற்கு கவுன்சிலின் 239 வது கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 வரையில் ஆட்சேர்ப்புக்கள் எதுவும் செய்யப்படாமையினால் இக் கடமைகளை நிறைவேற்றுதல் தடைப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. | குறிப்பிட்ட பதவிகளுக்கான அனுமதியை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெற்ற பின்னர் குறிப்பிட்ட அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சபையால் பாரளுமன்றத்தில் பட்டியல்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் 2020 திசெம்பர் 31 திகதி வரையில் பாராளுமன்றத்தில் பட்டியல் படுத்தப்படவில்லை. | அறிக்கை செயன்முறை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் பாராளுமன்றத்தில் செயலாற்றல் அறிக்கையை பட்டியல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காகவும் பயிற்சிக் கொடுப்பனவுகள் மற்றும் பயிற்சி செலவுகளுக்காகவும் வரவு செலவுத் திட்டத்தில் ரூபா 495,000 ஆன மொத்தத் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அச் செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை. என்பதுடன், வருமான மூலங்களான பதிவுக் கட்டணம் மற்றும் விசாரணைக் கட்டணம் என்பவற்றின் வரவு செலவுத்திட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையிலான வேறுபாடு 167 தொடக்கம் 200 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன. | ரூபா 126,500 ஆன ஒரு நிழற்பிரதி இயந்திரம் மற்றும் ரூபா 5,955 ஆன வைப்பை ரௌட்டர் என்பன 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டன. சபையின் ஊழியர்கள் பயிற்சிக் கொடுப்பனவுகள் மற்றும் பயிற்சிச் செலவுகள் என்பன ஏற்படும் வகையில் எவ்வித பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்கேற்கவில்லை. உரிமங்கள் மற்றும் பதிவுக் கட்டணங்கள் என்பன வருடத்தில் மீள் திருத்தம் செய்யபட்டமையுடன் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் போது இது கருத்திற் கொள்ளப்படவில்லை. | ஒரு நடைமுறை பாதீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (உ) | சபையினால் ஆவணங்கள் அல்லது பதிவேடுகள் என்பன முறையாகப் பேணப்படாத காரணத்தினால் ரூபா 338,225 ஆன மிகுதிக்கான வருமான மூலமானது சரியாக இணங்காணப்பட்டிருக்கவில்லை. என்பதுடன் அது நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் முற்பணமாகப் பெறப்பட்ட வருமானம் எனக் குறிப்பிடப்பட்டிருந்த மிகுதிகளுடன் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புள்ள சரியான மூலத்தை இணங்கண்டு கொள்ள முடியாத ரூபா 290,245 ஆனது திரட்டப்பட்ட நிதிக்குச் செலவு வைக்கப்பட்டுள்ளது. | மிகுதிகள் சரியாக இனங் காணப்பட்டு முறையாக கணக்கிடப்படல் வேண்டும். |